https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஐம்பெரும் காப்பியங்கள் உணர்த்தும் தமிழரின் வாழ்வியல் சடங்குகள்

**தீ. சண்முகம்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை

**முனைவர் ச. கொடியரசு**
உதவிப் பேராசிரியர், நெறியாளர்
தமிழியல் துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608002

**ஆய்வுச் சுருக்கம்**

*சடங்குகள் என்பவை வழித்தோன்றலாக மரபு ரீதியாக வரக்கூடியவை ஆகும். ஒவ்வொரு இனத்திலும் அவர்களுக்கென்று ஒரு தனித்த அடையாளத்துடன் உருவாக்கி அவற்றை வழிபடுவதே சடங்குகள் என்றழைக்கப்படும். மரபு என்பது முன்னோர்கள் தம் மக்களுக்கு அவர்கள் வாழ்ந்த நெறிமுறைகளை முறையாகக் கற்றுக் கொடுப்பதே மரபு எனலாம். மரபு பற்றி அறிஞர்கள் பலரும் தம்முடைய கருத்துக்களை கூறியுள்ளனர்.*

“எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.”[1]

*என பவனந்தியார் நன்னூலில் கூறியுள்ளார். இவரின் கூற்றுப் படி முன்னோர் கூறிய அம்மரபை நாம் பின்பற்றுவதை இலக்கியங்களில் உள்ள சடங்குகள் வாயிலாக அறியலாம். இலக்கியத்தில் சடங்குகள் உள்ளது போன்றே காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி முப்பெரும் காப்பியங்களிலும் சடங்குகள் காணப்படுகின்றன. இக்காப்பியங்களில் உள்ள வாழ்வியல் சடங்குகளாக பெயர்சூட்டுதல், திருமணச் சடங்கு, வழிபாட்டுச் சடங்கு, முளைப்பாரிச் சடங்கு, இறப்பு சடங்கு போன்ற பொதுவான சில முக்கியமான சடங்குகள் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக ஆராயப்படுகிறது.*

**முன்னுரை**

*காப்பியங்கள் மனிதனின் வாழ்வை மாற்றக்கூடியனவாகும் மற்றவர்களுக்கு எடுத்துக்கூறும் விதத்திலும் காப்பியங்கள் அமைகின்றன. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் என்ற பெருமைக்குறியது சிலப்பதிகாரம் ஆகும். இவற்றில் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் விரவிப்பெற்றதால் இது முத்தமிழ்க் காப்பியம் என்றழைக்கப்படுகின்றது. இக்காப்பியத்தில் இளங்கோவடிகள் தக்க வருணனை முறைகளுடன் கோவலன் கண்ணகி திருமணச் சடங்கு, வெறியாடல் போன்ற சடங்குகளை கூறியுள்ளார். இதேப்போல் இரண்டாவது காப்பியமான மணிமேகலையிலும் சீத்தலைச்சாத்தனார் மணிமேகலை என்னும் பெண்ணின் வாழ்வியலையும் மற்றும் நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள் போன்ற எண்ணற்ற சடங்கு முறைகள் குறித்து இக்காப்பியத்தில் விளக்கியுள்ளார். மூன்றாவது காப்பியமான சீவகசிந்தாமணியிலும் திருத்தக்கதேவர் பெண்கள் தங்களின் இருப்பிடங்களை அலங்காரம் செய்து கொண்டுள்ளதும் சடங்குகளில் ஒன்றாக காணப்படுகிறது. மேலும் சீவகன் எட்டுப்*

பெண்களைத் திருமணம் செய்கின்றான். திருமணத்தில் நடக்கும் பல்வேறு சடங்குகள் கையாளப்பட்டதையும், மேலும் முப்பொரும் காப்பியங்களில் காணப்பட்ட சில சடங்குகளை பற்றி இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

### வாழ்வியல் சடங்குகள்

ஒரு தனி மனிதனின் பிறப்பு முதல் அவனுடைய இறப்பு வரையில் பல படி நிலைகளைத் தாண்டி வருகிறான்.அந்த படி நிலைக்கு ஏற்ப செய்யப்படும் காரியங்கள் ஒரு சில வரையறுக்கப்பட்ட பழக்க வழக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டு ஒவ்வொரு சமுதாயத்திற்குள்ளும் பரவலாகச் செய்யப் படும் பாங்கினை நாம் காண முடிகின்றது இவ்வழக்கங்களே காலப்போக்கில் சடங்கு கள் என பெயர் பெற்றது. இவ்வாறு மனிதனுடைய வாழ்க்கைச் சுழற்சியில் பின் பற்றப்பட்ட சடங்குகள் வாழ்க்கை வட்டச் சடங்குகள் என்றழைக்கப்படுகின்றன.

### பெயர் சூட்டல்

மனிதனின் வாழ்வில் ஒரு புதிய வரவை எதிர்நோக்கும் வகையில் குழந்தைச் செல்வம் அமைகின்றது. மக்களின் வாழ்வில் குழந்தைச் செல்வமே மிகவும் போற்றப் படக்கூடிய ஒன்றாக காணப்படுகிறது.

**"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**

**மக்கட்பேறு அல்ல பிற"[2]**

என்று திருவள்ளுவர் மக்கட்செல்வத்தின் பெருமையைக் கூறியுள்ளார். குழந்தை செல்வத்தைப் பேணிகாத்துச் செய்யப்படும் சடங்குகளே பிறப்புச்சடங்குகள் எனப்படும். பிறந்த குழந்தைக்கு சேனை தொடுதல், பெயர்சூட்டுதல், மொட்டையடித்தல் போன்ற பலவிதமான சடங்குகளைச் நாம் இப்போதும் செய்து வருகிறோம்.

குழந்தைகளுக்கு பெயர் சூட்டல் என்பது சங்க காலம் தொட்டே பொதுவாக நடைமுறைகளில் இருக்கும் ஒன்று ஆகும். ஆனால் அவைகளில் தன் குலதெய்வப் பெயரையோ, முன்னோர்கள் பெயரை வைப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதைப் பின்பற்றி கோவலன் தன்னுடைய குலதெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயரை தன் மகளுக்கு சடங்கு முறைப்படி சூட்டினான் என்பதை சிலப்பதிகாரம் வழியாக அறியலாம்.

**"விஞ்சையின் பெயர்த்து விழுமம் தீர்த்த**

**எங்குல தெய்வப் பெயர் ஈங்கு இடுக என**

**அணிமேகலையார் ஆயிரங் கணிகையர்**

**"மணிமேகலை" என வாழத்திய ஞான்று**

**மங்கல மடந்தை மாதவி தன்னொடு**

**செம்பொன் மாரி செங்கையிற் பொழிய"[3]**

என்ற பாடல் வரிகள் மூலம் தம் முன்னோர்களை துயரில் இருந்து காப்பாற்றிய அந்த தெய்வத்தையே அவர்கள் தம் குலதெய்வமாக வழிப்பட்டனர். அதைத் தாமும் பின்பற்றியே தன்னுடைய மகளுக்கு மேகலை அணிந்த ஆயிரம் கணிகையர் கூடி நின்று மணிமேகலை என அத்தெய்வத்தின் பெயரையிட்டு, கோவலன் மகளை வாழத்தினர். அந்நாளில் மங்கல மடந்தை யான மதவியும், கோவலனும் தம் செங்கை யினால் செம்பொன்னை மழைப்போல பொழிந்தார்கள் என மாடலமறையோன் வழியாக அறியலாம். எனவே தம்முடைய தெயவத்திற்கு முறைப்படி சடங்குகள் செய்து தன் மகளுக்கு பெயரிட்டார் என்பதை இதன் மூலம் அறியலாம்.

### திருமணச் சடங்குகள்

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலன், கண்ணகி திருமணத்தில் சடங்கு முறையை சிறப்பாக கையாண்டுள்ளார்.

**"நீல விதானத்து நித்திலம்பும் பந்தர்க்கீழ்**

**வான் ஊர் மதியம் சகடு அணைய, வானத்துச்**

**சாலி ஒருமின் தகையாளைக் கோவலன்**

**மாமுது பார்பாள் மறைவழி காட்டிடத்**

**தீவலம் செய்து காண்பார்கண் நோன்பு என்னை"[4]**

சிலப்பதிகாரத்தில் கோவலன் – கண்ணகி திருமண முறையை விளக்க வந்த இளங்கோ வடிகள் தம் பெற்றோர் இரு பெருங்குரவரும் ஒன்றுகூடி ஒரு மங்கலமான திருமணநாளைத் தேர்ந்தெடுத்து, அன்று தெருவெங்கும் பல்வேறு தோரணங்களால் அழகு செய்து கொண்டும், அதோடு மட்டுமல்லாமல் நல்லிசை வாத்தியங்களும் முரசுகளும் முழங்கின, மத்தளங்கள் அதிர்ந்தன. சங்குகள் முறையே ஒலி முழங்கின. அரசன் ஊர்வல மாக எழுந்தது போல வெண்குடைகளும் ஊர்வலமாக எழுந்தன என்பதனையும் அறியமுடிகின்றது.

மணமக்கள் இருவரையும் வைரமணித்தூண் கள் விளங்கிய மண்டபத்தினுள் வானில் தவழ்கின்ற மதியானது உரோகினியைச் சாருகின்றதான நல்ல வேளையிலே வயது முதிர்ந்தவர்கள் மறைவழிகளைக் காட்டி

ஒன்று சேர்த்து மணந்து அவளுடன் தீயினையும் வலம் வருவதாகக் கூறுகின்றது.

**“கூந்தலில் முல்லைப் பூவினைச் சூடுவது திருமண அடையாளக் குறியாகும். ஒருத்தி திருமணம் ஆணவள் என்பதை முல்லைப் புவே சுட்டிக்காட்டும்.இதனையே வேறுமுறை யில் கூறவேண்டுமானால் இம்முல்லை மலர், ‘இக்கூந்தல் ஒருவருக்கு உரிமையுடையது’ என்று அறிவிக்கச் சூட்டப்பெற்றதாகவும் இருக்கலாம்”.[5]**

எந்த வகையில் சடங்குகள் மிகுதியாக அமைகின்றனவோ அந்த அவ்வளவு மனித வாழ்க்கையில் சில வரன்முறைக்குள் அமைந்துவிடக் காரணமாகின்றது. சடங்கு களைப் புறகணித்தவர்களிடம் காலம் செல்லச் செல்ல சடங்குகளை நடத்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகின்றது. உலகத்தோடு ஒட்டி வாழ வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளும் மனிதன் சடங்குகளில் சிலவற்றை நீக்கியோ அல்லது சேர்த்தோ விரிவுடையச் செய்கின்றான். இவ்வாறு வளர்ச்சியுறும் சடங்குகளில் முதன்மை கூறுகளுக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வர் சான்றாகத் திருமணச் சடங்களில் திருமாங்கல்யத்தில் மூன்று முடிச்சசுகள் இட்டுக் கட்டுதலைக் குறிப்பி டலாம். நாள் பார்த்து நேரம் பார்த்துச் சடங்கு நடத்துவதிலும் வேறுபாடு இல்லை. சிலப்பதிகாரத்தில் திருமணம் சார்ந்த சடங்கு விளக்கப்படுகின்றன.

சீவகசிந்தாமணி காப்பியத்திலும் ஆசிரியர் திருத்தக்கதேவர் பலவிதமான சடங்கு முறை களைக் கையாண்டுள்ளார். பெண்கள் தங்கள் இருப்பிடங்களை அலங்காரம் செய்து கொண்டுள்ளதும் சடங்கு முறைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இக்காப்பியத் தின் தலைவன் சீவகன் எட்டு பெண்களை திருமணம் செய்கின்றான். அவற்றில் காணப் படுகின்ற திருமணத்தில் பல்வேறு ஏற்பாட்டு டன் சடங்கு முறைகள் கையாளப் படுகின்றன.

விடியற்காலையில் இருந்தே மனைவினைக் குரிய ஏற்பாடுகள் தொடங்கப்படுகின்றன. வீட்டின் முன் பெரியபந்தல் போடப்போட்டு, புதுமணல் பரப்பப்பட்டு, மாலைகள் தொங்க விடப்பட்டுள்ளன. விளக்குகள் ஏற்றிவைக்கப் பட்டுள்ளன.உளுந்தங்களியும் பெருஞ்சோறும் வருவோர்க்கு வழங்க நிறைய உள்ளன. திருமண வீட்டில் ஒரே ஆரவாரம். புதிய குடத்தினை உச்சியிலே கொண்டுள்ள வயது முதிர்ந்த பெண்கள் வரிசையாக நின்றிருந்த னர். குழந்தைகளைப் பெற்றவராய்க கணவனோடு வாழக்கூடிய பெண்கள் நான்கு பேர் வருகின்றனர்.

குடங்களைப் பெற்றுத் தண்ணீரைக் கொண்டு மணமகளை முழுக்காட்டுவது சடங்காகக் கருதப்படுகின்றது. அத்தண்ணீரில் நெல்லும் மலரும் போடப்படுகின்றன. அத் தண்ணீரைத் தலையில் ஊற்றும் பொழுது ‘கற்பினின்றும் தவறாது, நல்ல பல செயல் களில் கணவனுக்கு உதவியாய் இருந்து அவன் விரும்பும் இணையாக வாழ்வாயாக’. என்று கூறுகின்றனர். இதுவே திருமணச் சடங்காகும். இத்திருமணத்தைத் தொல்காப் பியரும் ‘கரணம்’ என்று அழைக்கின்றார்.

இனிய இசைக்கருவிகள் முழங்கிக் கொண்டி ருக்க மிகுதியான தீ விளங்குமாறு மறையு ணர்ந்த சீவகனுக்கு நெருங்கிய அந்தணர், புரசமரத்தினால் செய்த துடுப்பினால் நெய்யை வார்த்து வளர்க்க, வெள்ளி முளைத்த அளவிலே, சீதத்தன் ஒளி பொருந்திய கலசத்தில் நன்னீரை வார்க்கின் றான். முருகனைப் போன்ற சீவகனும் அதை ஏற்கின்றான்.

**“துன்னினனர் பலாசிற் செய்த**
**துடுப்பினைய் சொரிந்து வேட்ப**
**மின்னியல் கலச நன்னீர்**
**சொரிந்தனன் வீர னேற்றான்**
**முன்னுபு விளங்கு வெள்ளி**
**முளைத்தெழு முருக னன்னான்”.[6]**

என்னும் பாடலடிகளின் மூலம் அந்தணரை வைத்து, நெய்யை வார்த்துத் திருமணச் சடங்கு நடைபெற்றதாக எடுத்துரைப்பதை நம்மால் அறியமுடிகின்றது.’முருகு’ என்றால் ‘அழகு’ என்று பொருள். இங்கு, நம் காப்பியத் தலைவன் சீவகன், முருகனோடு ஒப்பிட்டுக் கூறுவதால் அழகுமிக்கவனாகத் திகழ்கின்றான் என்பதைப் பாடலின் மூலம் அறியமுடிகின்றது.

அணிந்த மேலாடையும் ஒளிவிடுகின்ற மணிமாலையும் முத்துமாலையும், மணம் விரிந்த மலர்மாலையும் வெய்யனவாகி வளரும் முலைகளும் போன்றவற்றைத் தாங்க இயலாத நீண்டகாய கூந்தலை உடைய தத்தையின் ஒத்த வளையணிந்த முன்கையைப் பற்றிக் கட்டழலை வலமாக வந்து பொற்கட்டிலை அடைந்தான்.

**“நெட்டிருங் கூத்த லாட**
**னேர்வளை முன்கை பற்றிக்**
**கட்டழல் வலங்கொண் டாய்பொற்**

கட்டிறா னேறி னானே."[7]

இப்பாடல் இன்று திருமணத்தின் பொழுது பின்பற்றி வரும் நிகழ்வுகள் அன்றும் நடைப்பெற்றிருப்பதை வெளிப்படுத்துகிறது. கட்டழல் வலங்கொண்டாய் என்ற சொல்லின் மூலம் பெண்ணும் மாப்பிளையும் தீயை சுற்றி வலம் வரும் நிகழ்வை அறியலாம். அன்று மேற்கொண்ட திருமணச் சடங்குகளே இன்றும் கடைப்பிடிக்கப் படுகின்றன. என்பதற்கு இப்பாடல் ஒரு சான்றாகும்.

## திருமணம் பொருத்தம் பார்த்தல்

சீவகன் பதுமாவதியை மணக்கும் போதும் பெண்ணின் தந்தை சாதகம் பார்த்து, மணம் முடித்து செய்தியைக் காணமுடிகிறது. உலோக பாலன்,

"பூமியை யாடற் கொத்த
பொறியினனாதலானும்
மாமகளுயிரை மீட்டவலத்தினனாதலானும்
நேமியான் சிறுவனன்ன நெடுந்தகை
நேருமாயின்
நாமவற் கழகிதாக தங்கையைக் கொடுத்து
மென்றான்"[8]

என்று இவ்வாறு கூறுகின்றான்.

"பெருகுங் கணியிற் கணிபேசிய பேதி
னாளாற்
பருகற் கமைந்த வமிர்தின்படர் தீர்க்க
ஒற்றார்"[9]

மேலும் என்னும் பாடல் வரிகள் சீவகன், குணமாலை இவர்களது மணம், கணியனி டம் பொருத்தம் கேட்டபின்பே நிகழ்ந்தது என்று சுட்டப்படுதலைக் காணலாம். கணியினிடம் குறி கேட்டு அதன் பிறகே எச்செயலையும் தொடங்கும் வழக்கம் இருந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது. இன்றைய சூழலிலும் திருமணமோ அல்லது வேறு எந்தச் சடங்குகளோ நடைபெறுதற்கு நல்லநாள், நேரம் பார்த்து ஜோதிடரிடம் சென்று மணமகன், மணமகள் இருவருக்கும் பொருத்தம் பார்த்து அவை பொருந்தியிருந் தால் மட்டுமே மணம் முடித்து வைக்கின்றனர். பத்துப் பொருத்தங்களுக்கு ஒன்பது பொருத்தங்கள் பொருந்தி இருந்தால் மாத்திரமே சடங்கு செய்கின்றனர். அன்றையக் காலக்கட்டத்தில் உள்ளது போன்று இக்காலத்திலும் நடைபெறுகின்றது என்பதைக் கண்ணோக்கும் போது மரபின் அடிப்படையில் பின்பற்றக்கூடிய, மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகக் காணப்படுகிறது.

"கோப்பெருந் தேவி கொற்றக் காமக
னிவைகணாடி
யாப்புத் தையற் கின்றே நங்கையை அமைக்க
வென்னத்
தூப்புரி முத்து மாலை தொடக்கொடு தூக்கி
யெங்கும்
புப்புரிந் தணிந்து கோயில் புதுவது புனைந்த
தன்றே"[10]

நல்ல நாளிலே, நன்றென்று கூறிய நல்ல கோயிலிலே மணிபுனைந்த மகளிராகிய நல்லவர்கள் மங்கல மரபினை உரைத்து, அழகுறு தாமரை போன்ற உள்ளங்கையினை, உடைய முன் கையிலே இருவருக்குமு உறுதியுறு காப்பினை அணிய சுற்றிக் காத்தனர். அந்தணர் எவரும் இல்லாமல், வேள்வித்தீ இல்லாமல் இருவரும் கணவன், மனைவி என்பதை உறுதிபடுத்தக் காப்பினை அணிகின்றனர். திருமணத்திற்குக் காப்பு மட்டுமே அடையாளமாகக் கடைபிடித்திருக் கின்றனர் என்பது சடங்கு ரீதியாக வெளிப் படுத்தப்படுகின்றது. அக்காலத்திலும் இக்காலத்திலும் மணமக்கள் இருவரின் மணமும், ஒத்துப்போனால் மட்டுமே திருமணம் நடைபெறுகின்றது எனலாம். பண்பாட்டின் அடிப்படையில் சடங்குகள் மனிதனின் வாழிவில் அன்று முதல் இன்று வரை நடைப்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. சடங்குகளில் ஒவ்வொரு சமூகத்திற்கும் வெவ்வேறு விதமான பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன.மணமக்கள் இன்றைய சூழ்நிலையில் திருமணத்தின் போது விரதம் இருந்து திருமணம் செய்து கொள்கின்றனர்.

## திருமணத்தில் தாலி

திருமணமான மகளிர் அணியும் அணி கலன்களில் மிகவும் முதன்மையானதும், முக்கியமானதுமாக போற்றப்படுப்வது தாலி யாகும். தாலியைப் பற்றி பல்வேறு இலங்கியங்களில் கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் பாடலால் அறியலாம்.

"மங்கல அணியிற் பிறி துணி மகிழாழ்"[11]

கண்ணகி மங்கல அணியான தாலியைத் தவிர வேறு அணிகலன்கள் அணிவதில்லை என சிலப்திகாரத்தில் குறிப்பிடப்படுகிறது.

திருமணத்தின் போது சில சமூகத்தினர் தாலி இல்லாமல், வளையலை அணிந்து கொள்ளும் வழக்கம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். திருமணமான பெண்கள் அணியும் மங்கலச் சின்னங்களுள் தாலிக்கு அடுத்தபடியாக போற்றப்படுவது

கைவளையலாகும். அந்நாளில் சங்கினால் செய்யப்பட்ட வளையல்களும் பொற்றொடி களையும் மணமான செல்வப் பெண்டிர் அணிந்தனர். இப்பெண்கள் தன் கணவரை இழக்கும் போது மாங்கல்ய நாணைக் கழற்றுகையில் கைகளில் அணிந்த சங்கு வளையல்களையும் உடைத்தெறிந்தனர். இதற்கு சான்றாக சிலப்பதிகாரத்தில் கோவலன் கொலையுண்ட பின் கண்ணகி தன் தொடிகளை உடைத்தெறிந்த செய்தி குறிப்பிடப்படுகிறது.

**"கருத்துறு கணவற் கண்டபின் அல்லது,**

**இருத்தலம் இல்லேன்; நிற்றலும் இல்லேன் எனக்,**

**கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்து."[12]**

என தன் கணவனைக் கண்டபின் கொற்றவை வாயிலின் முன் தன் பொற்றொடிகளை தகர்த்து எறிந்தாள் என்பதை அறியலாம்.

ஒவ்வொரு சமூகத்திற்கும் வெவ்வேறு விதமான சடங்குமுறைகள் காணப்பட்டா லும், அன்றிலிருந்து இன்று வரை மரபு ரீதியாக சற்று மாற்றம் பெற்றும் அல்லது மாற்றம் பெறாத சூழ்நிலையும் காணப் படுகின்றன எனலாம். மணமக்கள் தம் உள்ளத்தளவில் ஒன்றுபட்டு இருக்கின்றனர். பெண்ணுக்குத் திருமணம் ஆனவுடன் பெற்றோர் சீர்வரிசை செய்யும் வழக்கம் அக்காலம் தொடங்கி, இக்காலம் வரையிலும் பின்பற்றக்கூடிய சடங்கு முறைகளுள் ஒன்றாகக் காணப்படுகிறது. அவற்றைக் கீழ்க்காணும் பாடல் வரிகளால் அறியலாம்.

**"...................... வீனை வல்லார்**

**உரியநூற் றென்மர் செம்பொ**

**னொள்றரைக் கோடி மூன்றூர்**

**ரெரியழன் முன்னர் நேர்ந்தேன்**

**என்மகட் கென்று சொன்னான்"[13]**

பெண்ணிற்குத் திருமணம் செய்து வைத்தப் பின்பு அவளுக்குத் துணையாக இருக்க, பணிப்பெண்களையும் பரிசாகப் பொன்னை யும் அளிக்கின்றனர். குபேரதத்தன் காற்சிலம் பும் கிண்கிணியும் பொருந்திய அடிகளை யுடைய அரிவையர், ஆடலில் சிறந்ததாகும் அரிய மணிகளிழைந்த யாழில் வல்லவராகத் திகழும் நூற்றெண்மரும் ஒன்றரைக்கோடி பொன்னையும் மூன்று ஊர்களையும் என் மகளுக்கு எரியும் தீயின் முன்னர் கொடுத்தேன் என்று இப்பாடல் கூறுவதி லிருந்து திருமணத்திற்காகப் பெண் பிள்ளைகளுக்குச் சீர்வரிசை வழங்கப்பட்டி ருக்கிறது என்பதை அறியலாம். பெண் பிள்ளைகளுக்குச் சீர்வரிசைகளும் மற்றும் இதரப் பொருட்களும் தருவதை சடங்கு களின் அடிப்படையில் பெரியோர் முன்னிலையில் செய்திருக்கின்றனர்.

**"பிள்ளளை வெண்பிறைச் சிறுநுதற் பெரும்பட்ட மணிமின்**

**வள்ள மேனியு மொளிர்மனிக் கலங்களிற் புனைமின்**

**வள்ளல் வாய்மொழி யான்படு பாலமிர் தல்லால்**

**உள்ள மேவினும் பிறவுணப் பெறீரெழு நாளும்"[14]**

வெண்மையான பிள்ளையாகிய பிறைபோன்ற சிறுநுதலேிலே பெரியபட்டத்தைப் புனையுங் கள். மெய்யெங்கும் விளங்கும் அணிகலன் களே அணியுங்கள். அரசன் அருளச் செயலாகையால் பசுவின் பால்கலந்த சோற்றை அல்லாமல் பிறவற்றை ஏழு நாட்களும் மனம் விரும்பினாலும் உண்ணா திருத்தல் வேண்டும் என்ற செய்தியை இப்பாடல் வரி உரைக்கிறது.

திருமண நிகழ்வு நடக்கும் பொழுதில் ஊண் உண்ணாமலிருத்தல், இழவு வீட்டிற்கு செல்லாதிருத்தல் போன்ற சம்பிராதயங்கள் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு சடங்கின் அடிப்படையில் மிகவும் பக்தியுடன் கையாளப்பட்டு வருகின்றன. இன்றும் நாட்டுப்புற மக்களிடையே திருமணத்திற்கு முன்னதாக, மணமக்கள் இருவருமே விரதம் இருந்து தாலி கட்டிய பிறகே உணவு உட்கொள்ளுதல் என்பது போன்ற பலவித மான சடங்குமுறைகள் மக்களிடையே இன்றைய சூழ்நிலையிலும் காணப் படுகின்றன.

## வழிபாட்டுச் சடங்குகள்

சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரையை எரித்து விட்டு சேர நாட்டிற்குச் சென்ற காட்சியை அங்கு வாழ்ந்த பழங்குடிப் பெண்களாகிய குறத்தி ஒருத்தி பார்த்தாள் என்று சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ள மையை அறிய முடிகின்றது.

**"இறைவனை நல்லாய்**

**அறியாள் மற்று அன்னைளு அலர்கடன்பன் என்றே**

**வெறியாடல் தான் விரும்புளு வேலன் வருக என்றாள்**

**...................................................................**

வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து

நீலப் பறவைமேல் நேரிழை தன்னோடும்”[15]

பெண்கள் அனைவரும் ஒன்றுகூடிப பேசிக் கொண்டு இருக்கும் பொழுது, தன்னுடைய தலைவனாகிய முருகனைப்பற்றிப் பின் வருமாறு கூறுகின்றாள். மிளகுக்கொடி படர்கின்ற குளிந்த மலையுள்ளவன் நம் காதலன். அவன் செய்த இந்நோயினைத் தீர்க்கும் மருந்தும் அவனே என்பதனை அறியாமல் போய்விட்டேன். முருகன் என்மேல் வந்து அணங்கினான் என்று நினைத்து, அதனைப் போக்க வெறியாடு தலை நிகழ்விக்கவும் எண்ணினாளோ, என்ற குறிப்புகளைச் சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது.

முருகன் கொடுமையான கோபத்துடன் வந்து வெறியாடலை நிகழ்த்துவார் எனவும் அந்த வேளையில் சிறந்த அணிகலன்களை அணிந்த புதல்வனுடன் வருவார் என்று கூறுகின்றனர். முருகன் குறிஞ்சித் தலைவனாகவும், வள்ளி குறிஞ்சி நிலத்து ஒப்பற்றத் தலைவியாகவும் குறிஞ்சி நிலத்தில் வள்ளிக்கு எண்ணற்ற சடங்கு முறைகளைச் செய்ததாகவும் முருகன் மீது நம்பிக்கையு டையபெண்களாகஇருந்தனார் என்பதையும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. பெண்கள் அதிக ஈடுபாட்டுடன் இறைவனை வணங்குவதும் தம் உள்ளத்தால் முழுமனதுடன் இறைவனு க்கு பலப் பொருட்களை வைத்து ஆராதனை செய்வதுமாகப் பெண்கள் காணப்படுகின்றனர்.பெண்கள் சகலமும் இறைவனே என்று இறைவன் முன் விழுந்து பணிகின்றனர். பெண்கள் இறைவனை வேண்டி வழிபாடு நிகழ்த்துவது சடங்கு முறைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

## முளைப்பாரிச் சடங்கு

திருமணம் நன்கு நடைபெற திருமண நாளுக்கு முன்னாள் நவதானியங்களை அந்தந்தக் கிரகங்களுக்கு உவப்பாக முறைப் படி மண்மடக்கில் வைத்து, மணவறையில் அம்மிக்கல்லிற்குத் தென் பக்கத்தில் பச்சை யரிசி பரப்பி ஒன்பது ஒன்பது வீடாகக் கீறி நவக்கிரகம் அமைத்து தருப்பை அல்லது முப்புரிநூலிலான பட்டுத் துணியில் பந்தித்து தூபதீப நைவைத்தியம் வைத்து வணங்குவர். பிறகு திருமணம் முடிந்த ஒற்றைப்படை நாளில் பாலிகைகளில் விளைந்துள்ளதை நதியிலோ குளத்திலோ விட வேண்டும்.

திருமண விழாக்களில் முளைப்பாலிகை இடம் பெறுவதை சிலப்பதிகாரம் காப்பியத்தில் காணலாம். கோவலன் – கண்ணகி திருமண விழாவில் மணப்பொருட்கள் முதலியவற்றை மங்கலமாக வேண்டி மகளிர் வருதலைக் கூறுமிடத்தில்,

“விளக்கினர், கலத்தினார், விரிந்த பாலிகை

முளைக்குட நிரையினர்.”[16] எனக் கூறப்பட்டுள்ளது.

மணிமேகலை காப்பியத்திலும் வழிபாட்டுச் சடங்குகளில் இடம் பெறும் முளைப்பாரிச் சடங்கு முறை காணப்படுகிறது. மணிமேகலையில், இந்திரவிழா நடைபெறும் பொழுது, விழா சிறப்புற அமையவும் நடத்தும் முறைகள் பற்றியும் முரசறைவோன்

“தோரண வீதியும், தோமறு கோட்டியும்,

பூரண கும்பமும், பொலம்பா லிகைகளும்,

பாவை விளக்கும் ,பலவுடன் பரப்புமின்,[17]

என்று கூறுகின்றான். இத்தொடரில் பாலிகை என்பது முளைப்பாலிகையைக் குறிக்கும். காப்பியத்தில் அக்காலங்களில் முளைப்பாரிச் சடங்கு மழை வேண்டி நிகழ்த்தியிருக்கின் றனர் என்பது தெளிவுப்படுத்தப்படுகிறது எனலாம்.

முளைப்பாரிச் சடங்கு வளர்ச்சிக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே நடைப்பெறுகின்றது. மழைக்காக வேண்டுதல் செய்து இந்தச் சடங்கினைச் செய்து ஆற்றில் விடும்பொழுது கடவுள் மழையை அருள்வார் என இன்றைய காலத்திலும் மக்கள் நம்புகின்றனர்.

## இறப்புச் சடங்கு

“இறப்பு என்பது மனித வாழ்வின் இறுதி நிலை என்றாலும் அதற்குப் பின்னா மீண்டும் இவ்வுலகில் பிறக்கின்றனா என்ற நம்பிக்கை உலகம் முழுவதிலும் உள்ள மக்களிடையே பரவலாக நிலவி வருகிறது. இதனால் மற்ற நிலைகளில் கடைபிடிக்கும் சடங்கைக் காட்டிலும் இறந்தவாகளுக்குச் செய்யும் ‘ஈமச்சடங்குகள்’ மனித வாழ்வில் முதன்மையாகக் கருதப்படுகிறது. இந்நிலை பழங்குடியினா முதல் தமக்கென ஒரு நாகரிகத்தைக் கொண்டிருக்கும் பல்வேறு சாதிக் குழுவினரிடமும் மதக்குழுவினா வரை அனைவரிடமும் காணக் கூடியதா கும்” என்று வாழ்வியற் களஞ்சியம் கூறுகிறது. இதனை,

“அழல்பெய் குழிசியும், புழல்பெய் மண்டையும்,

வெள்ளில் பாடையும், உள்ளீட்டு

*அறுவையும்,*

*பரிந்த மாலையும், உடைந்த கும்பமும்*

*நெல்லும், பொரியும், சில்பலி அரிசியும்"[18]*

என்று மணிமேகலையில் இறந்தவர் விண்ணுலகம் செல்லும்போது அவர்களுக்கு தடைகள் ஏற்படாதவாறு இருக்க செய்யும் சடங்குகளில் இடம்பெறக் கூடிய பொருள்களின் வகைகளை உரைக்கிறது. ஈமக் காரியத்தில் எள்ளும்,பொரியும் இறைக்கும் வழக்கம் இன்றும் இருப்பதை நாம் அறியமுடிகிறது.

## நடுகல்

அன்றைய காலங்களில் போர்க்களத்தில் இறந்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நினைவுக் குறியீடு நடுகல் ஆகும். தொடக்கத்தில் வீரனைச் சிறப்பிக்கும் நோக்கம் கொண்டு அமைந்த இந்நடுகல் பின்னர் அதனைத் தெய்வமாக்கி வழிபடும் நிலைக்கு உயர்ந்தது. நடுகல் மானம், கற்பு, அறம் ஆகியவற்றில் சிறந்தவர்களுக்கும் பின்னர் எடுக்கப்படலா யிற்று. இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் முறையினைத் தொல்காப்பியர்,

*"காட்சி கால்கோள் நீர்படை நடுதல்*

*சீர்த்த மரபின் பெரும்படை*
*வாழ்த்தலென்று"[19]*

எனக் காட்டுகிறார்.

*"பூப்பலி செய்து, காப்புடை நிறுத்தி,*

*வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்து,*

*'கடவுள் மங்கலம் செய்க' என ஏவினான்;"[20]*

இப்பாடல் மூலம் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கல்லிலே படிவம் அமைத்து வேள்வியும் விழாவும் நடத்தி நடுகல் அமைத்தான்.மேலும் பூசை செய்ய அவள் தோழியான தேவந்தி என்பவளை பூசாரியாக நியமித்தான் என்று சிலப்பதிகாரம் வாயிலாக அறியலாம்.

## முடிவுரை

வாழ்வியல் சடங்குகள் அனைத்தும் நம் முன்னோர்களின் மரபையொட்டியே நாம் அதை பின்பற்றுகிறோம். சடங்குகள் சமுதா யத்திற்காக, பண்பாட்டைக் கட்டிகாப்பதற் காக உருவாக்கப்பட்டவை. ஒவ்வொரு சமுதாய மக்களிடையேயும் ஏதாவது ஒரு செயலின் அடிப்படையிலும் நம்பிக்கையின் அடிப்படையிலும் சடங்குகள் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. எனவே நம் வாழ்வின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வியல் சடங்குகளும், வழிப்பாட்டுச் சடங்குகளும் ஒன்றோ டொன்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியும் செய்திகளாகும்.

## சான்றென் விளக்கம்

1. நன்னூல்,. பொதுவியல், சொல்.நூ.,388
2. திருக்குறள் -61
3. சிலம்பு,. அடைக்., பா.15; (23-41)
4. சிலம்பு,.1-49-53
5. நா. செல்வராசு, பண்டைத் தமிழர் திருமண வாழக்கை,ப.162
6. சீவக., காந்த. இல., பா. வரி.834
7. மேலது., பா.வ.835
8. சீவக., பா. 1339
9. சீவக., குண., இல., பா.வ.1062
10. சீவக., பது., இல., பா.வ.1343
11. சிலம்பு,.4-50
12. சிலம்பு,. 23-79-81
13. சீவக., சுர., இல., பா.வ.2079
14. சீவக., இலக்., இல., பா.வ.2390
15. சிலம்பு,.24-11-16
16. சிலம்பு,.1-6-58-59
17. மணிமே,. 1-44
18. மணிமே,. பா.100
19. தொல்., பொரு.நூ.63 (19-20) பக்.233
20. சிலம்பு,.28.,231-234

## துணை நூல் பட்டியல்

1. நன்னூல், பேராசிரியர் .சோம.இளவரசு, முதல் பதிப்பு ஜூலை-2019, மணிவாசகர் பதிப்பகம்.
2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், அறிஞர் சுப்பிரமணியன், ச.வே, மணிவாசர் பதிப்பகம், நான்காம் பதிப்பு, 2022
3. சிலப்பதிகாரம், புலியூர் கேசிகன், ராம் பிரசுரம், சென்னை-600 001, இரண்டாம் பதிப்பு – ஆகஸ்ட் - 2019
4. தொல்காப்பியம், புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை -14, எட்டாம் பதிப்பு – 2018.
5. மணிமேகலை, புலியூர் கேசிகன், ராம் பிரசுரம், சென்னை-600 001, முதல் பதிப்பு – மே – 2012
6. சீவகசிந்தாமணி, மாணிக்கவாசன் ஞா, உமா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு – டிசம்பர் – 2007.